**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ÿ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 256 Of 2025

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11- வது நாள் புதன்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Leo Terans T | கிராமம்: | |
| க.பெ. (அ)<br>த.பெ. | Thainesh Raj | வேலை: | Manager,<br>Kuruchi Branch,<br>Canara Bank,<br>(Erstwhile Syndicate Bank),<br>Coimbatore. |
| வயது | 31 | செல்போன் எண் | |

வா.சா.1 **Leo Terans T** ஆக 11.03.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள்

உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 21.08.2017 – Loan Application (MSME) submitted by the defendant -அசல்- **Ex.A1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 21.08.2017 – Particulars of the Asset and Liability-அசல்-**Ex.A2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. 01.09.2017 – Letter of Sanction-அசல்-**Ex.A3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. 01.09.2017 – Composite Hypothecation Agreement -அசல்-**Ex.A4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 10.07.2020 – Pro note -அசல்-**Ex.A5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

6.10.07.2020 – Guarantee Covering Letter -அசல்- **Ex.A6** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

7. 10.07.2020 – Letter of Under Taking -அசல்-**Ex.A7** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. 10.07.2020 – Agreement Cum Deef of Hypothecation -அசல்-**Ex.A8** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

9. – Annexure-II -அசல்- **Ex.A9** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

10.31.12.2020 – Application for Restructuring Appendix-I -அசல்- **Ex.A10** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

11.31.12.2020 – Appendix-6 (Draft letter of under taking from guarantor for restructuring of loan)-அசல்- **Ex.A11** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

12.31.12.2020 – Appendix-6A-(Debt Restructuring Agreement) -அசல்- **Ex.A12** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

13.31.12.2020 – Appendix-7 (Debtor Creditor Agreement) -அசல்- **Ex.A13** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

14. 02.01.2021 – Sanction Letter -அசல்- **Ex.A14** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

15. 04.11.2024– Statement of Account for A/c. No.65669910000149-அசல்- **Ex.A15** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

16.04.11.2024– Statement of Account for A/c. No.65669160000266– -அசல்- **Ex.A16** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

17.04.11.2024– Statement of Account for A/c. No.65669450001162– -அசல்- **Ex.A17** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

18.D.No.566/2025 Dt.20.02.2025 – Pre-Mediation Court-Non Starter Report-Dt.21.01.2025-அசல்- **Ex.A18** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரதிவாதி நிறுவனம் விவசாயம் செய்வதற்கு தேவையான உபகரணங்களை தயாரிக்கும் நிறுவனம் என்பதை தெரிந்து தான் தாவா கடன் அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி உபகரணங்களுக்கு பிரதிவாதி நிறுவனம் காப்புரிமை ஏதேனும் வாங்கி உள்ளார்களா என்றால் இல்லை. பிரதிவாதி நிறுவனம் விவசாயத்தின் கால நிலை மற்றும் சூழ்நிலைக்கு தேவையான உபகரணங்களை தயாரிக்கும் நிறுவனம் என்றால் சரிதான். எனவே பிரதிவாதி நிறுவனமானது நிரந்தரமாகவும் தொடர்ந்தும் வருமானம் ஈட்டாது என்றால் இருக்கலாம். தாவா கடன் தொகைக்கு இன்சுரன்ஸ் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. பிரதிவாதி தொழில் பாதிக்கப்பட்ட காரணத்தினாலும், கடன் தொகையை வாதி வங்கி இன்சுரன்ஸ் செய்ய தவறிவிட்டதாலும் தாவா கடன் தொகைக்கு பிரதிவாதி பொறுப்பல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு சரியான மழை இல்லாத காரணத்தினாலும், நிரந்தார வருமானம் இல்லாத காரணத்தினாலும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றால் இருக்கலாம். பிரதிவாதி கடன் வாங்கிய சமயத்தில் இருந்து கொரோனா தொற்று காலம் வரை சரியாக தவணை தொகையை செலுத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான். கொரோனா பாதிப்பால் பிரதிவாதி அவருடைய வாடிக்கையாளரிடமிருந்து பணம் வசூல் செய்ய முடியாமல் போனது, இயற்கை உபாதையாலும் பிரதிவாதி தாவா கடன் தவணையை செலுத்த முடியாமல் போனது என்றால் இருக்கலாம். கடன் வழங்கப்பட்டது அவருடைய எதிர்கால தொழில் வளர்ச்சி அடிப்படையில் ஆகும். கடன் தொகையை கட்ட தவறியது பிரதிவாதியின் தனிப்பட்ட காரணம் மட்டும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் அசையும் சொத்து இதர பண வசதிகளோ இருக்கவில்லை என்று

சொன்னால் சரிதான். எனவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.03.11 18:16:12 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.